## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-3 - நல்குரவும்
**('ப்ரணயகலஹத்தில் முரண்பட்ட தம்மை வசீகரித்தவன், முரண்பட்டது அனைத்தையும் செல்வமாகக் கொண்டு திருவிண்ணகரில் வாழும் கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தன்' என்று அருளிச் செய்தல்)**

3249 * நல்குரவும் செல்வும் * நரகும் சுவர்க்கமுமாய் *
வெல்பகையும் நட்பும் * விடமும் அமுதமுமாய் **
பல்வகையும் பரந்த * பெருமான் என்னை ஆள்வானை *
செல்வம் மல்கு குடித் * திருவிண்ணகர்க் கண்டேனே 1

3250 கண்ட இன்பம் துன்பம் * கலக்கங்களும் தேற்றமுமாய் *
தண்டமும் தண்மையும் * தழலும் நிழலுமாய் **
கண்டு கோடற்கரிய * பெருமான் என்னை ஆள்வானூர் *
தெண்திரைப் புனல் சூழ் * திருவிண்ணகர் நன்னகரே 2

3251 நகரமும் நாடுகளும் * ஞானமும் மூடமுமாய் *
நிகரில் சூழ் சுடராய் இருளாய் * நிலனாய் விசும்பாய் **
சிகர மாடங்கள் சூழ் * திருவிண்ணகர் சேர்ந்த பிரான் *
புகர்கொள் கீர்த்தி அல்லால் இல்லை * யாவர்க்கும் புண்ணியமே 3

3252 புண்ணியம் பாவம் * புணர்ச்சி பிரிவென்று இவையாய் *
எண்ணமாய் மறப்பாய் * உண்மையாய் இன்மையாய் அல்லனாய் **
திண்ண மாடங்கள் சூழ் * திருவிண்ணகர் சேர்ந்த பிரான் *
கண்ணன் இன்னருளே * கண்டு கொண்மின்கள் கைதவமே 4

3253 கைதவம் செம்மை * கருமை வெளுமையுமாய் *
மெய் பொய் இளமை முதுமை * புதுமை பழமையுமாய் **
செய்ய திண்மதிள் சூழ் * திருவிண்ணகர் சேர்ந்த பிரான் *
பெய்த காவு கண்டீர் * பெருந்தேவுடை மூவுலகே 5

3254 மூவுலகங்களுமாய் * அல்லனாய் உகப்பாய் முனிவாய் *
பூவில் வாழ் மகளாய்த் * தவ்வையாய்ப் புகழாய்ப் பழியாய் **
தேவர் மேவித் தொழும் * திருவிண்ணகர் சேர்ந்த பிரான் *
பாவியேன் மனத்தே * உறைகின்ற பரஞ்சுடரே 6

3255 பரஞ்சுடர் உடம்பாய் * அழுக்கு பதித்த உடம்பாய் *
கரந்தும் தோன்றியும் நின்றும் * கைதவங்கள் செய்தும் ** விண்ணோர்
சிரங்களால் வணங்கும் * திருவிண்ணகர் சேர்ந்த பிரான் *
வரங்கொள் பாதமல்லால் இல்லை * யாவர்க்கும் வன்சரணே 7

3256 வன்சரண் சுரர்க்காய் * அசுரர்க்கு வெங்கூற்றமுமாய் *

தன்சரண் நிழற் கீழ் * உலகம் வைத்தும் வையாதும் **
தென்சரண் திசைக்குத் * திருவிண்ணகர் சேர்ந்த பிரான் *
என் சரண் என் கண்ணன் * என்னை ஆளுடை என்னப்பனே 8

3257 என்னப்பன் எனக்காய் இகுளாய் * என்னைப் பெற்றவளாய் *
பொன்னப்பன் மணியப்பன் * முத்தப்பன் என்னப்பனுமாய் **
மின்னப்பொன் மதிள் சூழ் * திருவிண்ணகர் சேர்ந்த அப்பன் *
தன்னொப்பாரில் அப்பன் * தந்தனன் தன தாள் நிழலே 9

3258 நிழல் வெய்யில் சிறுமை பெருமை * குறுமை நெடுமையுமாய் *
சுழல்வன நிற்பன * மற்றுமாய் அவை அல்லனுமாய் **
மழலை வாய் வண்டு வாழ் * திருவிண்ணகர் மன்னு பிரான் *
கழல்கள் அன்றி மற்றோர் * களைகண் இலம் காண்மின்களே 10

3259 * காண்மின்கள் உலகீர்! என்று * கண்முகப்பே நிமிர்ந்த *
தாளிணையன் தன்னைக் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
ஆணை ஆயிரத்துத் * திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார் *
கோணை இன்றி விண்ணோர்க்கு * என்றும் ஆவர் குரவர்களே 11

**அடிவரவு:** நன்கு கண்ட நகரம் புண்ணியம் கைதவம் மூவுலகு
பரஞ்சுடர் வன்சரண் என் நிழல் காண் குரவை